*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p179-194** | Available online at: www.ngmtamil.in
*Original Research Paper*

# சண்டமாரியும் சமணக் கொள்கைகளும்

## CAṆḌAMĀRI AND THE PRINCIPLES OF JAINISM

**முனைவர் சு.இளமாறன்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி-629 802.

**Dr.S.Elamaran,**
*Assistant Professor, Department of Tamil & Research Centre,*
*Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802.*
***ORCiD:*** *https://orcid.org/0000-0002-7559-5980, EMail: maranlpc@gmail.com.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 30-07-2026
**Published: 02-08-2026**

*Corresponding Author
Email: *maranlpc@gmail.com*
Tel: *+919600248107*

**Abstract:** In the history of Tamil literature, Jainism has played a significant role in disseminating noble philosophical ideals such as virtue, morality, renunciation, non-violence (Ahimsa), the doctrine of karma, and the cycle of rebirth through literary works. Among the Aimperumkāppiyaṅkaḷ (Five Minor Epics), Yasodhara Kāvyam stands out as an important epic that artistically presents the fundamental principles of Jainism. Rather than being merely a narrative, the epic serves as a philosophical work that expounds the ethical values essential to human life. Throughout the epic, Jain doctrines such as non-killing, the impermanence of worldly pleasures, the consequences of karma, the superiority of ascetic life, and liberation from the cycle of rebirth are consistently emphasized at every stage of the narrative. The objective of this study is to examine and interpret the Jain philosophical principles embodied in Yasodhara Kāvyam from both literary and religious perspectives. Yasodhara Kāvyam is not merely a religious text intended for doctrinal propagation; it is also a philosophical work that explains the principle of cause and effect in human existence. The concept of Ahimsa fosters humanitarian values, the doctrine of karma establishes ethical responsibility, and the idea of the cycle of rebirth guides human beings toward spiritual advancement. These three principles are closely interconnected and are presented in an integrated manner throughout the epic.

**Keywords:** *Yacōdhara Kāviyam, Jainism, Ahimsa, Karma, Asceticism, Impermanence, Cycle of Rebirth, Caṇḍamāri, Jain Principles.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமண சமயம் அறம், ஒழுக்கம், துறவு, அஹிம்சை, கர்மவினை, பிறவிச்சுழற்சி ஆகிய உயரிய தத்துவங்களை இலக்கியங்களின் வழி மக்களிடம் கொண்டு சென்றுள்ளது. அந்த வகையில் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான யசோதர காவியம் சமண சமயக் கோட்பாடுகளை இலக்கிய வடிவில் வெளிப்படுத்தும் சிறந்த காப்பியமாக விளங்குகிறது. இக்காப்பியம் வெறும் கதையாடலாக இல்லாமல், மனித வாழ்வின் அறநெறிகளை எடுத்துரைக்கும் தத்துவ இலக்கியமாகத் திகழ்கிறது. உயிர்களைக் கொல்லாமை, உலக இன்பங்களின் நிலையாமை, வினைப்பயன், துறவற வாழ்வின் மேன்மை, பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை போன்ற சமண சமயக் கருத்துக்கள் கதையின் ஒவ்வொரு நிலையிலும் வலியுறுத்தப்படுகின்றன. இக்கட்டுரை, யசோதர காவியத்தில் இடம்பெற்றுள்ள சமண சமயக் கொள்கைகளை இலக்கிய மற்றும் சமய நோக்கில் ஆராய்ந்து விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. யசோதர காவியம் வெறும் சமயப் பிரச்சார நூலாக இல்லாமல், மனித வாழ்வின் காரண–காரிய உறவை விளக்கும் தத்துவ நூலாகவும் விளங்குகிறது. அஹிம்சை மனிதநேயத்தை வளர்க்கிறது; கர்மவினைக் கொள்கை ஒழுக்கத்தை நிலைநாட்டுகிறது; பிறவிச்சுழற்சி பற்றிய சிந்தனை மனிதனை ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிநடத்துகிறது. இம்மூன்று கொள்கைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாக இக்காப்பியத்தில் அமைந்துள்ளன.

**திறவுச்சொற்கள்:** யசோதர காவியம், சமணம், அஹிம்சை, கர்மவினை, துறவறம், நிலையாமை, பிறவிச்சுழற்சி, சண்டமாரி, கொள்கைகள்

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சமண சமயம் மிக முக்கியமான பங்காற்றியுள்ளது. சங்க இலக்கியத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அறநெறி, ஒழுக்கம், மனிதநேயம், உயிர் சமத்துவம் ஆகிய கருத்துக்களை இலக்கிய வடிவில் மக்களிடம் கொண்டு சென்றவர்கள் சமண முனிவர்களாவர். அவர்கள் இயற்றிய சீவகசிந்தாமணி, நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம் போன்ற நூல்கள் தமிழில் சமண சமயத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.அவற்றுள் யசோதர காவியம் சிறிய காப்பியமாக இருந்தாலும், அதன் கருத்து உலகம் மிகவும் விரிவுடையதாகும். மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? உலக வாழ்க்கை ஏன் நிலையற்றது? மனிதன் செய்த வினைகளின் பயன் எவ்வாறு அவனைத் தொடர்கிறது? துறவு ஏன் உயர்ந்த வாழ்க்கையாகக் கருதப்படுகிறது? போன்ற பல வினாக்களுக்கு சமணத் தத்துவ அடிப்படையில் விடையளிக்கும் இலக்கியமாக இக்காப்பியம் விளங்குகிறது.சமண சமயத்தின் மையக் கருத்து **"உயிர்களைக் கொல்லாமை"** என்பதாகும். உயிர்களைக் கொல்லாமை மட்டுமல்லாமல், மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் பிறருக்குத் தீங்கு செய்யாமை சமணத்தின் அடிப்படை அறமாகக் கருதப்படுகிறது. இந்தச் சிந்தனை முழுவதும் யசோதர காவியத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது.

**யசோதர காவியம்**

யசோதர காவியம் தமிழின் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியம் ஐந்து சருக்கங்களைக் கொண்டது. பாடல்கள் 330. சில பதிப்புகளில் 320 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள்

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.19**

காணப்பட்டாலும், இது சமண முனிவரால் இயற்றப்பட்டதாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காப்பியத்தின் காலம் கி.பி. 10–12ஆம் நூற்றாண்டுகளுக்குள் அமைந்திருக்கலாம் என்று பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யசோதர காவியம் காஞ்சிபுரம் பாகுபலி நயினார் என்பவரால் முதன்முதலாக அச்சிடப்பட்டு வெளிவந்தது. அச்சிடப்பட்ட ஆண்டு 1887 என்று ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1944-ஆம் ஆண்டில் வெளியிட்ட முதல் பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதே நிறுவனம் ஐந்தாவது முறையாக வெளியிட்ட 1982ஆம் பதிப்பில் 1881 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் **வீடூர், பூரணச் சந்திர நயினார் பதிப்பில் முதல் பதிப்பு பாகுபலி நயினாரால் 1869-இல் வெளியிடப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. 1908இல் இந்நூலை இரண்டாவது முறையாகப் பதிப்பித்த தில்லையம்பூர் வேங்கடராம ஐயங்கார் பதிப்பில் முதல் பதிப்பைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் இல்லை". (பொ.வேல்சாமி ,உங்கள் நூலகம் - ஆகஸ்ட் 2011 )**இக்காப்பியம் சமண சமயக் கருத்துக்களை மக்களுக்கு எளிமையாக எடுத்துரைக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. வடமொழி மரபில் காணப்படும் யசோதரன் பற்றிய கதையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபிற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் இதனை வடிவமைத்துள்ளார்.காப்பியத்தின் மையக் கருத்து, உலக வாழ்வு நிலையற்றது; அறவாழ்வே நிலையானது என்பதாகும்.

**"மருவு வெவ்வினை வாயின் மறுத்துடன்**
**பொருவில் புண்ணியம் போகம் புணர்ப்பதும்**
**வெருவு செய்யும் வினைப்பயன் இற்றெனத்**
**தெரிவு றுப்பதும் செப்புத லுற்றதே" (யசோ.பா.4)**

நம்மை வந்து சேரும் கொடிய வினைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளவும் நற்செயல்களை செய்து வீடுபேறு அடையவும் தீவினைகளின் பயன் இத்தன்மையது என அறிவுறுத்துவதுமே இக்காவியத்தின் நோக்கமாகும். உயிர்களைக் கொல்லாமை, உண்மை பேசுதல், திருடாமை, ஒழுக்கமான வாழ்க்கை, பற்றின்மை ஆகியவை சமண சமயத்தின் முக்கியமான ஐந்து ஒழுக்க நெறிகளாகும். இந்த ஐந்து நெறிகளும் யசோதர காவியத்தின் கதையமைப்பில் இயல்பாக இணைக்கப்பட்டுள்ளன.யசோதர காவியம் சமயக் கருத்துக்களை நேரடியாகப் போதிக்காமல், கதையின் வழியாகக் கூறுகிறது. இதுவே அதன் இலக்கியச் சிறப்பாகும். கதாபாத்திரங்களின் செயல்கள், அவர்களின் இன்ப–துன்ப அனுபவங்கள், வினைப்பயன்கள் ஆகியவற்றின் மூலம் சமணத் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.

யசோதர காவியம் சமயக் காப்பியமாக இருந்தாலும், அதில் பல இலக்கிய நயங்கள் காணப்படுகின்றன.பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான தமிழில் இயற்றப்பட்டுள்ளது. இதனால் சமணக் கொள்கைகள் மக்களிடையே எளிதில் பரவின.கதை சுவை குறையாமல், ஒவ்வொரு நிகழ்விலும் அறநெறி கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் காப்பியம் சமய நூலாகவும் இலக்கியமாகவும் இரு நிலைகளிலும் சிறந்து விளங்குகிறது.நிலையாமை, பிறவிச்சுழற்சி, கர்மவினை போன்ற சிக்கலான தத்துவங்களை எளிய உவமைகளின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.இக்காப்பியத்தின் மிகப்பெரிய சிறப்பு, சமணத் தத்துவம் இலக்கியச் சுவையுடன் இணைக்கப்பட்டிருப்பதாகும். இதனால் வாசகன் கதையை ரசிப்பதோடு, அறநெறியையும்

கற்றுக்கொள்கிறான். தமிழில் அறநெறியை எடுத்துரைக்கும் நூல்களான திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி போன்றவற்றுடன் ஒப்பிடும்போது, யசோதர காவியம் உலக வாழ்வு நிலையற்றது; அறவாழ்வே நிலையானது என்னும் சமண சமயக் கொள்கைகளை, கதையின் ஊடாக வலியுறுத்துவதால் தனித்துவம் பெறுகிறது.

**கதைச்சுருக்கம்**

ஒதயநாட்டின் மன்னன் மாரிதத்தன் ஆவான். அந்நாட்டின் தலைநகரம் இராசபுரம் என்பதாகும். அவன் தனது நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். அப்போது அந்தநகர மக்கள் மன்னனைக் கண்டு வணங்கி 'சண்டமாரி'என்னும் பெண் தெய்வத்திற்கு உயிர்ப்பலி கொடுத்துப் பூசைகள் செய்யவேண்டும் என்று வேண்டினர். அவ்வாறு செய்யவில்லை எனில் நாட்டிற்குப் பெருங்கேடு வரும் என்று அச்சம் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளை மன்னன் ஏற்றுக் கொண்டான். பெண் தெய்வத்திற்கு இரட்டையாய்ப் பிறந்த விலங்குகளைத் தேடிப்பிடித்துப் பலியிடுவார்கள். ஆனால் மன்னன் தன் தகுதி உயர்வைக் காட்டிட இரட்டையராய்ப் பிறந்த மனிதச் சிறார்களைப் பலியிட எண்ணினான். தன் தளபதி 'சண்டகருமன்' என்பவனிடம் இரட்டையரைத் தேடிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அப்போது, தெருவில் பிச்சை எடுத்துத் திரிந்த அபயருசி (ஆண்), அபயமதி (பெண்) என்ற பிறவி இரட்டையர்கள் அவனது கண்ணில் பட்டனர். தளபதி அவர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டு மன்னனை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவர்கள் இருவரும் கோயிலுக்கு முன் நிறுத்தப்பட்டார்கள். மன்னனின் பணியாளர்கள் இரட்டையரிடம், சண்டமாரி பெண் தெய்வத்தை வேண்டிக் கொண்டு மன்னன் நீழி வாழ்க! என்று வாழ்த்துங்கள் என்று கூறினார்.

இரட்டையரும் புன்முறுவலுடன் அனைத்தது உயிர்களுக்கும் துன்பம் செய்யாமல், அருளறம் மேற்கொண்டு, இம்மன்னன், பிறவித் துன்பத்தைத் துடைக்கும் சமண நெறியில் சேர்ந்துப் புகழுடன் வாழ்க! என்று வாழ்த்தினர். எவ்வித அச்சமும் இன்றி முகமலர்ச்சியுடன், மகிழ்ந்து தன்னை வாழ்த்தியதைக் கண்ட மன்னன் வியப்புற்றான். சாவுக்கு அஞ்சாமல் எப்படி இருக்க முடிகிறது? என்று அவர்களை மன்னன் கேட்டான். அதற்கு அவர்கள், உயிர்க் கொலையினால் உண்டாகும் தீமைகளை உணர்ந்ததினால். அவ்வாறு உயிர்க் கொலையை செய்யும் மன்னனை வாழ்த்தினால் பயன் உண்டாகுமோ? எனத் தாங்கள் நினைத்ததாகக் கூறினர். உயிர்க் கொலையினால் உண்டாகும் தீய விளைவுகளை மன்னனுக்கு விளக்குவதற்காகத் தங்களது முந்தைய பிறப்புகளின் வரலாற்றைக் கூற முன்வந்தனர். மன்னனும் அவர்களைக் கொலை செய்யாமல் விடுத்து, அவர்களின் முற்பிறவி வரலாற்றைக் கேட்கத் தொடங்கினான்.

முற்பிறவியில் தாங்கள் அவந்தி நாட்டு மன்னன் அசோகனின் மகன் யசோதரனாகவும் (அபயருசி) மனைவி சந்திரமதியாகவும் (அபயமதி) வாழ்ந்ததாக முற்பிறவி வரலாற்றைக் கூறத் தொடங்கினர். அவந்தி நாட்டு மன்னன் அசோகன் ஒருநாள் தன் தலைமுடிகளில் ஒன்று நரைத்திருப்பது கண்டு தனக்கு முதுமை வந்துவிட்டது என்பதை உணர்ந்து அரச பதவியைத் தன் மகன் யசோதரனிடம் கொடுத்துவிட்டுத் துறவு மேற்கொண்டான். யசோதரன், அற நெறிகளை மறந்து, மனைவி அமிர்தமதியுடன் உலகியல் இன்பங்களில் திளைத்திருந்தான். இவ்விருவருக்கும் "யசோமதி"

என்னும் மகன் பிறந்தான். ஒருநாள் அமிர்தமதி யசோதரனுடன் பள்ளி அறையில் பஞ்சணையில் இன்புற்றுக் கண்ணுறங்கிக் கிடந்தாள். அப்போது அரண்மனையின் யானைப்பாகன் அட்டபங்கன் ‘மாளவப்பஞ்சமம்’ என்னும் இசைப்பண்ணை கேட்டோர் உருகும்படியாகப் பாடினான்.யானைப்பாகனின் குரல் இனிமையால் அமிர்தமதி அவனிடம் மனத்தைப் பறிகொடுத்தாள். மேலும் நேரில் காணாமலேயே, அவனது குரலிசையில் கவர்ந்து அவனிடம் காமமுற்றாள்.

தனது நிலையினைத் தோழி ‘குணவதி’ என்பவளிடம் கூறினாள். இதனைக் கேட்ட அதிர்ந்துபோன குணவதி இச்செயல் ஆகாது என அறிவுரை கூறினாள். அவள் பல வகையிலும் அமிர்தமதியைத் தெளிவிக்க முயற்சி செய்தாள். வேறு வழியின்றித் தோழி அட்டபங்கனைத் தேடிச் சென்று பார்த்தாள். அருவருக்கத்தக்க தோற்றத்துடனும், தொழுநோயால் அழுகிய உடலுடனும், புழுதி படிந்த தோற்றத்திலிருந்த அட்டபங்கனோடு அமிர்தமதி கள்ள உறவு கொண்டாள். மன்னன் யசோதரனை வெறுக்கத் தொடங்கினாள். அமிர்தமதியின் நடந்ததையில் ஐயம் கொண்ட யசோதரன், அவளது கள்ளக்காதலை அறிந்து அவளைக் கொலை செய்ய நினைத்தான். “பெண்கொலை தவறு” என்றுணர்ந்து மனம் வெறுத்த நிலையில் பெண்ணின்பத்தையும் அரச பதவியையும் துறக்க நினைத்தான். தகாத ஒழுக்கத்தினை வெளிப்படையாகக் கூறமுடியாத மன்னன், தனக்கொரு ‘கெட்ட கனவு’ வந்தது என்று தாயிடம் கூறினான். தாய் ‘சந்திரமதி’ ‘சண்டமாரி’ என்னும் பெண் தெய்வத்துக்கு உயிர்ப்பலி கொடுத்து வழிபட்டால் தீய கனவின் பயன் ஒன்றும் செய்யாது என்று கூறினாள். உயிர்ப்பலி கொடுப்பதை யசோதரன் மறுத்துரைத்தான். அதற்குத் தாய் ‘சந்திரமதி உயிர்ப்பலி கொடுக்காவிட்டாலும், மாவினால் செய்த கோழி ஒன்றினை வெட்டிப் பலி கொடு’ என்றாள். உயிர்ப்பலி போன்று செயற்கையாக,மாயக்கோழியை வெட்டியதும், மாயக்கோழி உயிர்க்கோழியையே போலத் துடித்துக் கூவியது.

இதைக் கண்ட மன்னன் "யசோதரன்" துறவு மேற்கொண்டான். கணவன் யசோதரனையும், மாமியார் சந்திரமதியையும் துறவுக்குச் செல்லும் முன் தான் கொடுக்கும் விருந்தினை உண்டு செல்ல என அழைத்தாள். அவ்விருந்தில் இருவருக்கும் நஞ்சு கலந்த உணவைப் பரிமாறிக் கொன்று விட்டாள். நஞ்சுண்ட இறந்த யசோதரனும், அவனது தாய் சந்திரமதியும் அடுத்தடுத்தப் பல்வேறு விலங்குகளாகவும், பறவைகளாகவும் பிறந்துத் துன்புற்றனர். உயிரற்ற மாயக்கோழி என்றாலும், உயிர்ப்பலி என்ற நினைவுடன் யசோதரன் செய்ததால் அது கொலைப் பழியாகிறது.அதன் பயனால் இருவரும் பல பிறப்புகளில் விலங்குகளாய்ப் பிறந்து கொடும் துன்பங்களுக்கு ஆளாயினர். தந்தை யசோதரன் இறந்ததும் மகன் "யசோமதி" அரசனாகிறான். மன்னன் யசோமதியும், மனைவி புஷ்பாவலியும் அபயருசி,அபயமதி என்னும் இரட்டை மக்களைப் பெற்றனர். இவர்களே பூர்வ பிறப்பு வரலாறு கூறும் இக்காவியக் கதைமாந்தர்களாகும்.

அமிர்தமதியால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட யசோதரனும் அவனது தாய் சந்திரமதியும் விந்துமலைச் சாரலில் மயிலாகவும் (யசோதரன்), உஞ்சையின் நகரில் நாயாகவும் (சந்திரமதி) பிறக்கிறார்கள். மேலும் இவர்கள் முள்ளம் பன்றி- பாம்பு, மீன்-முதலை, பெண் ஆடு- ஆண் ஆடு என பல பிறவிகள் எடுக்கின்றனர். ஒருநாள் மன்னன் யசோமதி கொற்றவைத் தெய்வமாகிய 'சண்டமாரிக்கு

உயிர்ப்பலி கொடுத்து வணங்கினான். வேட்டையில் கொல்லப்பட்ட ஊன்களைச் சண்டமாரிக்குப் படைத்தான். வேறு சில அந்தணர்களோ இவ்வூன் முன்பே வெட்டப்பட்டு எச்சில் படுத்திவிட்டன. இதற்கு பரிகாரமாக இளம் ஆட்டினை வெட்டி மணக்க மணக்கப் படைக்கவேண்டும் என்று புண்ணிய நூல்களான வேதங்களைக் கற்ற அந்தணர்கள் கூறினார்கள். இதக்கேட்ட அரசன் தன்னால் வளர்க்கக் கொடுத்திருந்த ஆட்டினைக் கொண்டு வருக என ஆணையிட்டான்.

அங்கு ஆடாக நின்றுகொண்டிருந்த யசோதரன் தனது பழம் பிறப்பினை உணர்ந்து கொண்டதோடு இம் மன்னன் யசோமதி தனக்கு மகனாவான் என்பதையும் உணர்ந்தான். மேலும் இது எனது உஞ்சயினி நகரம். இது நான் வாழ்ந்த அரண்மனை. இவை எனது பொருட்கள் எனப் பலவாறு உணர்ந்தான். இறுதியில் உஞ்சயினி நகர்ப்புறத்தில், சேரியில் கோழிகளாகப் (யசோதரனும் சந்திரமதியும்) பிறந்து வளர்கின்றன. அவற்றைக் கண்ட மன்னன் விருப்பமுற்றுத் தனது அரண்மனையில் கொண்டு வந்து வளர்த்தான்.மன்னன் யசோமதியும், மனைவி புஷ்பாவலியும் வசந்த மண்டபத்தில் தங்கி ஆடல் பாடல் கேளிக்கைகளில் திளைத்திருந்தனர்.

அரசனுடன் வந்திருந்த சண்டகருமா அக்காட்டின் ஒரு பக்கத்தில் யோகம் செய்து கொண்டிருந்த அகம்பணர் என்னும் முனிவரைக் கண்டான். அவரை வணங்கி யோகத்தின் விளைவுகளைக் கேட்டான். அவர் நன்ஞானம், நற்காட்சி, நற்செயல் என்னும் மூன்றையும் விளக்கினார். விரதமாகிய ஐவகை ஒழுக்கங்களையும் கூறினார். அவர் கூறியவற்றில் கொலை ஒன்றினைத் தவிர ஏனையவற்றைத் தான் பின்பற்றுவதாகக் கூறினான். அம்முனிவரோ கொலையினால் வரும் துன்பங்களைக் கூறினார். இதற்கு எடுத்துக்காட்டாக யசோதரன்-சந்திரமதி ஆகிய இருவரும் படும் துன்பங்களைக் கூறினார். உண்மை உணர்ந்த சண்டகருமன் சமண தருமத்தை முழுவதும் ஏற்றுக் கொண்டான்.

அப்போது அரண்மனையில் வளர்கின்ற கோழிகள் அம்முனிவரின் அறிவுரைகளைக் கேட்டுத் தமது பழம் பிறப்புணர்ந்து, மகிழ்ந்து உரக்கக்கூவின. கோழிகளின் கூக்குரல் கேட்ட மன்னன் வெகுண்டு அம்பினால் அக்கோழிகளைக் கொன்று விடுகிறான். அக் கோழிகளின் உயிர்கள் அம்மன்னன் கூடிப் புணர்ந்திருந்த அவன் மனைவி புஷ்பாவலியின் கருவில் இரட்டைப் பிள்ளைகளாய் புகுந்து பிறக்கின்றன. அவ்விருவரில் முன் பிறந்த ஆண்பிள்ளைக்கு அபயருசி என்றும், அடுத்துப் பிறந்த பெண் பிள்ளைக்கு அபயமதி என்றும் பெயரிட்டு வளர்த்தான்.

ஒருநாள் மன்னன் யசோமதி வேட்டைக்குச் சென்றான். அக்காட்டில் ‘சுதத்த முனிவரைக் கண்டு அவரைக் கொல்ல வாளினை உருவினான். மன்னன் கலியாணமித்திரன் (வணிகன்) என்னும் அவனது உயிர்த்தோழன் அவனைத் தடுத்து அம்முனிவரது வரலாற்றையும், சிறப்பையும் உணர்த்தினான். மன்னன் மனம் திருந்தித் தன் தலையினை வெட்டி முனிவருக்குப் பலியிடக் கருதினான். அதனையும் அத் தோழன் தடுத்து, முனிவரை வணங்கச் செய்தான். முனிவர் அம் மன்னர் யசோமதியின் தாத்தா அசோகன் முன் செய்த தவப்பயனால் தேவருலகில் இன்புற்றிருப்பதாகக் கூறினார். யசோமதியின் தாயாகிய அமிர்தமதி (யசோதரனின் மனைவி) நரகத்தில் துயருறுவதையும் கூறினார். யசோதரனும், சந்திரமதியும் (யசோதரனின் தாய்) மாக்கோழியைக் கொன்று பலியிட்டதால் உண்டான பாவத்தால் பல்வேறு விலங்குகளாய்ப் பிறந்து வருந்தி இறந்ததைக் கூறினார். அவர்கள் இருவரும் இறுதியாக "உன்னுடைய மகனாகவும், மகளாகவும் (இரட்டையர்கள்) பிறந்திருக்கின்றார்கள்" என்றும் கூறினார். உண்மை உணர்ந்த மன்னன் யசோமதி அவ்விரட்டை மக்களை முனிவன் முன் வருவித்தான். அவர்கள்

இருவரும் தங்கள் பழம் பிறப்புணர்ந்து வருந்தினர். யசோமதி தனக்கு இனி வாழ வழி அருளும்படி கேட்டான். முனிவர் சமண சமய அறங்களைக் கூற அவன் துறவு பூண்டான். அவனது கடைசி மகன் யசோதரன் அரச உரிமை பெற்றான். இரட்டையர்களான அபயருசியும் அபயமதியும் துறவு பூண்டு அம்முனிவரின் சீடர்களுடன் சேர்ந்தனர். அம்முனிவனுடன் அவர்கள் இராசபுரத்தின் புறத்தே உள்ள சோலையில் தங்கினர். இரட்டையர் மட்டும் பிச்சை எடுக்கப் புறப்பட்டனர். இவர்களைத்தான் சண்டகருமன் என்பவன் மன்னன் மாரித்தத்தனிடம் கொண்டு சென்றான். இந்த நெடிய கதையைக் கேட்ட மன்னன் மாரித்தத்தன் இரட்டையர் இருவரும் அவந்தி நாட்டு மன்னன் யசோமதியின் புதல்வர்கள் என்று அறிந்தான். அத்துடன் கொலைத் தொழில் எவ்வளவு கொடியது என்றுணர்ந்தான். மனம் மாறினான். சமணனாகித் துறவுபூண்டான்.கொலையிலிருந்து விடுதலையான அபயருசியும் அபயமதியும் சமண அறநெறியில் நின்று முதிர்ச்சியடைந்து தேவராய் மாறி இன்புற்றிருந்தனர்.

**சண்டமாரி**

இக்காப்பியத்தில் சண்டமாரி ஒரு உக்கிரமான கிராமத் தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறாள். அக்கால மக்களிடையே சண்டமாரி வழிபாடு பரவலாக இருந்ததோடு, அவளுக்காக உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமும் காணப்பட்டது. சண்டமாரி என்பது மனிதப் பலி மற்றும் விலங்குப் பலியை ஏற்கும் ஒரு நாட்டார் தெய்வம் ஆகும். சண்டமாரி என்னும் பெண் தெய்வம் மிகுந்த சீற்றம் கொண்டவள். உயர்ந்த சிறப்புகள் இல்லாதவள். மெய்ப்பொருள் தெளிவும் கூர்மையான அறிவும் அற்ற பக்தர்கள் அதாவது கீழ் மக்கள் வணங்கும் கொடிய சிறு தெய்வமானவள். அத்தகைய சண்டை மாதிரி என்னும் பெயர் கொண்ட பெண் தெய்வத்தின் கோயிலுக்கு மன்னன் சென்றான்.

**“ பாவ மூர்த்தி படிவ மிருந்தவத்**
**தேவி மாடம் அடைந்து செறிகழல்**
**மாவ லோன்வலங் கொண்டு வணங்கினன்**
**தேவி யெம்மிடர் சிந்துக என்றரோ” ( யசோ. பா.18)**

பாவமே வடிவமான கொடிய சண்ட மாரியின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்த கோவிலில் அடைந்த மன்னன் மாரிதத்தன் கோவிலை வலம் வந்து தேவியை எங்கள் துன்பங்கள் எல்லாம் போக்குகள் என்று வணங்கி நின்றான்.மாரிதத்தன் என்ற மன்னன் இத்தெய்வத்திற்குப் பலியிட இரட்டைக் குழந்தைகளை அழைத்து வர ஆணையிடுகிறான். ஆனால், சமண முனிவரின் போதனையால் ஈர்க்கப்பட்டு, உயிர்ப்பலிக்கு பதிலாக மாக்கோழியைப் பலியிடுகிறான். உண்மையான உயிரைக் கொல்லாமல் மாவினால் செய்த கோழியைப் பலியிட்டாலும் கூட, 'கொல்ல வேண்டும்' என்ற எண்ணம் இருந்ததால், அது பெரும் பாவமாக மாறி அடுத்தடுத்த பிறவிகளில் துன்பத்தை அவனுக்குத் துன்பத்தை விளைவித்தது என எடுத்துரைத்து, இக்காவியம் ஜீவகாருண்யத்தை வலியுறுத்துகிறது.

இந்தப் பலியிடும் முறையை சமண சமயம் கடுமையாக எதிர்க்கிறது. சமண சமயத்தின் அடிப்படை அறமாக அகிம்சை கருதப்படுகிறது. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் எந்த உயிருக்கும் தீங்கு செய்யக்கூடாது என்பது அதன் மையக் கருத்தாகும். எந்த உயிரையும் கொல்வது பாவம்,அதன் விளைவாக கர்மவினை ஏற்பட்டு, பிறவித் துன்பம் தொடரும் என்பதை இக்காப்பியம் வலியுறுத்துகிறது. எனவே, சண்டமாரி வழிபாட்டை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அகிம்சை,

கொல்லாமை, கருணை மற்றும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு ஆகிய சமண அறங்களை யசோதர காவியம் வலியுறுத்துகிறது.

**சமணக் கொள்கைகள்**

சமணம் இந்தியாவின் மிகப் பழமையான சமயங்களில் ஒன்றாகும். இச்சமயத்தை 24-வது தீர்த்தங்கரரான மகாவீரர் உலகம் முழுவதும் பரப்பினார். இச்சமயம் உயிர்களின் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் சமமான மதிப்புடையது. எந்த உயிரையும் துன்புறுத்தக் கூடாது என்பது அதன் அடிப்படைச் சிந்தனையாகும். மனிதன் ஒழுக்கத்துடனும், உயிர்கள் அனைத்திடத்தும் அன்புடனும் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது உயிர்களைக் கொல்லாமை, உண்மை, ஒழுக்கம், பற்றின்மை, கருணை ஆகிய உயர்ந்த மனிதநேய நெறிகளை சமணம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆன்மாவை கர்மப் பந்தத்திலிருந்து விடுவித்து மோட்சம் அடைவதே சமண சமயத்தின் உயர்ந்த குறிக்கோளாகும். இந்தக் கொள்கைகள் சமய வாழ்விற்கு மட்டுமல்லாமல், சமூக நல்லிணக்கம் மற்றும் அறநெறி வாழ்க்கைக்கும் முக்கிய வழிகாட்டுதலாக விளங்குகின்றன.

சமண சமயத்தின் மற்றொரு அடிப்படைக் கொள்கை கர்மவினை ஆகும். மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும் அழியாத பதிவாக அவனுடைய ஆன்மாவில் பதிந்து, அதற்கேற்ப பலனை வழங்கும் என்று சமணம் கூறுகிறது. நல்வினை நன்மையையும், தீவினை துன்பத்தையும் விளைவிக்கும்.யசோதர காவியத்தில் கதாபாத்திரங்கள் தங்கள் செயல்களுக்கேற்ப பலனை அனுபவிக்கின்றனர். மனித வாழ்க்கையில் நிகழும் இன்ப–துன்பங்களுக்கு இறைவன் காரணமல்ல; மனிதனின் வினைகளே காரணம் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். கர்மவினைக் கொள்கை மனிதனை ஒழுக்கமான வாழ்க்கை வாழத் தூண்டுகிறது. எந்தச் செயலும் பலனின்றி போவதில்லை என்ற உணர்வு, தீய செயல்களைத் தவிர்க்கும் மனப்பான்மையை உருவாக்குகிறது. இதனால் சமுதாயத்தில் அறநெறி நிலைபெறுகிறது.

சமண சமயத்தில் பிறப்பு–இறப்பு என்பது முடிவற்ற சுழற்சியாகக் கருதப்படுகிறது. கர்மவினைகளின் காரணமாக ஆன்மா மீண்டும் மீண்டும் பிறக்கிறது. இந்தப் பிறவிச்சுழற்சியிலிருந்து விடுபடுவதே மனித வாழ்க்கையின் உயர்ந்த இலட்சிமாகும். யசோதர காவியத்தில் உலக வாழ்க்கை நிலையற்றது என்றும், பிறவி துன்பம் நிறைந்தது என்றும் எடுத்துரைக்கப்படுகிறது. செல்வம், அதிகாரம், அழகு, உறவுகள் ஆகிய அனைத்தும் நிலையற்றவை; அறமே மனிதனை நிலையான இன்பத்திற்கு அழைத்துச் செல்கிறது.

**யசோதர காவியத்தில் அறம்**

யசோதர காவியம் முழுவதும் அறவாழ்வை உயர்த்திப் பேசுகிறது. சமண சமயத்தின் அடிப்படையான ஐந்து விரதங்கள் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் ஒழுக்க நெறிகளாக இக்காப்பியத்தில் சித்தரிக்கப்படுகின்றன.யசோதர காவியத்தின் ஆசிரியர், மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும் சமுதாயத்தையும் பாதிக்கிறது என்ற உண்மையை உணர்த்துகிறார். ஆகவே, அறநெறி தனிப்பட்ட கடமையாக மட்டும் இல்லாமல், சமூகப் பொறுப்பாகவும் கருதப்படுகிறது.

**“ஆக்குவ தேதெனில் அறத்தை ஆக்குக**
**போக்குவ தேதெனில் வெகுளி போக்கவே**

**நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக**
**காக்குவ தேதெனில் விரதம் காக்கவே" ( யசோ.கா.330)**

சமண சமயத்தின் உயிர்நாடியாக விளங்குவது உயிர்களைக் கொல்லாமை ஆகும். மனிதன் மட்டுமன்றி, உலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வதற்கான சம உரிமை உண்டு என்ற உயரிய மனிதநேயச் சிந்தனையை சமணம் வலியுறுத்துகிறது. இதனால், எந்த உயிருக்கும் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் தீங்கு விளைவிக்கக் கூடாது என்று அறிவுறுத்துகிறது.யசோதர காவியத்தில் உயிர்ப்பலி, வன்முறை, வேட்டை போன்ற செயல்கள் கடுமையாகக் கண்டிக்கப்படுகின்றன. உயிரைக் காப்பதே அறம்; உயிரைக் கொல்வது தீவினை என்ற கருத்து காப்பியத்தின் மையமாக அமைகிறது. வினையே மனிதனைப் பின்தொடர்கிறது; அதிலிருந்து யாரும் தப்ப முடியாது என்ற சமணச் சிந்தனை முழுக் காப்பியத்திலும் எதிரொலிக்கிறது.

**"அறப்பொருள் விளைக்குங் காட்சி யருந்தவ ரருளிற் றன்றிப்**
**பிறப்புணர்ந் ததனின் யாமே பெயர்த்துணர்ந் திடவும் பட்ட**
**திறப்புவ மிதன்கட் டேற்ற மினிதுவைத் திடுமி னென்றான்**
**உறப்பணிந் தெவ முள்ளத் துவந்தனர் கேட்க லுற்றார்". ( யசோ.கா.73)**

என அபயருசி அறத்தின் மேன்மையினைக் கூற அனைவரும்பணிந்து கேட்டனர். அறமானது, மலம் நிறைந்த உடம்பில் உள்ள மனத்தில் உண்டாகும் வேறுபாடுகளை மாற்றிவிடும். ஐம்புல நுகர்ச்சியால் ஏற்படும் ஆசைகளை அறுக்கும் கொலை முதலான கொடும் செயல்களுக்குக் காரணமான கெட்ட எண்ணங்கள் முளைக்காத படி அழித்துவிடும். அழகிய பெண்களிடம் இருக்கும் காம உணர்வை வெறுக்க செய்யும் என்பதை,

**"மலமலி குரம்பை யின்கண் மனத்தெழு விகற்பை மாற்றும்**
**புலமவி போகத் தின்கண் ணாசையை பொன்று விக்கும்**
**கொலைமலி கொடுமை தன்னைக் குறைத்திடு மனத்திற் கோ**
**சிலைமலி நுதலி னார்தங் காதலிற் றீமை செப்பும்". ( யசோ.கா.71)**

என யசோதர காவியம் உலக மக்களுக்கு எடுத்துரைக்கிறது. உலகப் பொருள்களின் நிலைமைகளை நுட்பமாக கண்டு அடைவதே நல் அறிவாகும். அவ்வாறு அறிந்த பொருள்களின் உண்மை இயல்புகளை ஐயமும் சிக்கலும் இன்றி உள்ளத்தால் தெளிவது நற்காட்சியாகும். மனவிசும் மலர்கள் பூக்கும் அசோக மரத்தடியில் வீட்டுள்ள அருகக் கடவுள் நமக்கு தந்துள்ள நல்லறங்களில் நம்பிக்கை வைத்து வாழ்வதும் நற்காட்சியில் அடங்கும் என இக்காவியம் போதிக்கிறது.

**"உறுபொரு ணிலைமை தன்னை யுற்றுணர் வறிவ தாகும்**
**அறிபொரு ளதனிற் றூய்மை யகத்தெழு தெள¤வு காட்சி**
**நறுமலர்ப் பிண்டி நாதன் நல்லறப் பெருமை தன்மேல்**
**இறுகிய மகிழ்ச்சி கண்டா யிதனது பிரிவு மென்றான்" ( யசோ.கா.241)**

பெரும்பழியாகிய கொலையும் பொய் கூறலும் திருட்டும் மாற்றான் மனைவிடம் காமமும் பொருள் ஆசையும் ஆகிய ஐந்து வகை குற்றங்களில் இருந்தும் மனதை மீட்டு செய்யும் ஐவகை

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.19**

நோன்புகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் செய்யக்கூடாது எனப் பெரியோர்களால் கூறப்பட்ட புலால் உணவு, மது, கள் ஆகியவற்றை ஒதுக்கி விட்டு வாழ்வதே நல்லொழுக்கம் ஆகும். கொல்லாமை பண்பினால் ஒருவன் இவ்வுலகத்தில் தெய்வமாகப் போற்றப்படுபவான். மாறாத உண்மை கூறுதல் ஒருவனுக்கு நன் மதிப்பை தரும். களவில் இருந்து ஒருவன் விலகி நின்றால் மதிப்பற்ற பேரருள் கிடைக்கும். பிறன் மனைவியை காமுறாத நற்குணம், அழியாத பெருமையும் உறுதியான மனவளமையும் தரும். பொருள் ஆசை இல்லாமல் மனத்தெளிவை தரும் புலால் உணவையும் மதுவையும் தவிர்ப்பதாலும் அதேபோல் புகழையும் அழகையும் வெற்றியையும் பொருளையும் சிறப்பையும் இன்பத்தையும் தரும் என்று அகம்பனர் கூற்றின் வழி யசோதர காவியம் அறத்தினைப் போதிக்கிறது.

**நிலையாமை அறம்**

சமண சமய இலக்கியங்களில் உலக வாழ்க்கையின் நிலையாமை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. செல்வம், இளமை, உடலழகு, அதிகாரம், உறவுகள் ஆகிய அனைத்தும் காலப்போக்கில் அழிந்துபோகும் இயல்புடையவை. எனவே அவற்றில் அளவுக்கு மீறிய பற்றுக் கொள்ளுதல் துன்பத்திற்கே வழிவகுக்கும். யசோதர காவியத்தில் உலக வாழ்க்கையின் நிலையாமை பல நிகழ்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. கதாபாத்திரங்களின் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவதன் மூலம், உலக வாழ்வின் நிலையற்ற தன்மை ஆசிரியரால் உணர்த்தப்படுகிறது.

**"யானுயிர் வாழ்த லெண்ணி யெள஠யவர் தம்மைக் கொல்**
**வானுய ரின்ப மேலால் வருநெறி திரியு மன்றி (லின்**
**ஊனுயி ரின்ப மெண்ணி யெண்ணமற் றொன்று மின்றி**
**மானுயர் வாழ்வுமண்ணின் மரித்திடு மியல்பிற் றன்றே" ( யசோ.கா.140)**

என்னும் பாடலில் நான் உயிர் வாழ்வதற்காக எளிய உயிர்களைக் கொண்டால் மேலுலக இன்பம் மட்டுமல்லாமல் எனக்கு வரும் நல்லவைகளும் நீங்கிவிடும். மேலும் உடம்போடு கூடிய இன்பத்தை மட்டும் எண்ணி மற்ற உயிர்களுக்கு வரும் துன்பங்களை கருதாமல் வாழும் வாழ்க்கை விரைவில் அழிந்துவிடும். யசோதரன் தன் அம்மாவை நோக்கி,தாயே முக்காலத்தில் உன் குலத்தில் பிறந்த மூதாதையர் எவருமே கொடிய மனத்தவராய் கொலை புரியும் செய்கையர் அல்லர்.இப்போது உனக்கு மட்டும் அந்த எண்ணம் எப்படி வந்தது. உயிர் கொலையால் மேலுலக இன்பம் கெடுதலந்தி பல துன்பங்களும் வந்து சேரும் எனவே நீ கூறியதால் நமக்கு எவ்வித நன்மையும் வரப்போவதில்லை என்றான். இந்தச் சிந்தனை நாலடியார், திருக்குறள், சீவகசிந்தாமணி போன்ற தமிழ் அறநூல்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகின் நிலையாமையை உணர்ந்தால்தான் மனிதன் அறநெறியில் நிலைத்து வாழ முடியும் என்ற சமணக் கருத்து யசோதர காவியத்தில் தெளிவாக வெளிப்படுகிறது.

**துறவறம்**

சமண சமயத்தின் இறுதி இலட்சியம் மோட்சம் (வீடுபேறு) ஆகும். அதனை அடைவதற்கான உயர்ந்த வழியாக துறவறம் கருதப்படுகிறது. யசோதர காவியத்தில் உலக வாழ்வின் இன்பங்கள் நிலையற்றவை என்பதை உணர்ந்த மனிதன் துறவற வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதே உயர்ந்த நெறி என்று வலியுறுத்தப்படுகிறது.

DOI: https://doi.org/10.63300/kijts06022026.19

**"குரைகழல் அசோகன் மெய்க் குணத ரற்பணிந்**
**தரைசர்க ளைம்பதிற் றிருவர் தம்முடன்**
**உரைசெய லருந்தவத் துறவு கொண்டுபோய்**
**வரையுடை வனமது மருவி னானரோ." ( யசோ.கா.84)**

அசோகன் , தன் மகன் யசோதரனை நாட்டின் மன்னனாக ஆணையிட்டு மணிமுடியை அறிவித்தான். தனது மனைவியாகிய சந்திரமதி வருத்தமுற அரசபதவியைத் துறந்து அசோகன் துறவறம் சென்றான். சமணத் தத்துவத்தின்படி, ஆசை, கோபம், மாயை, பேராசை போன்ற மனக்குற்றங்களே மனிதனைப் பிறவிச் சுழற்சியில் கட்டிப்போடுகின்றன. இவற்றிலிருந்து விடுபடுவதற்கு மனஒழுக்கமும் புலனடக்கமும் அவசியமாகின்றன. இதனை யசோதர காவியம் கதையின் வளர்ச்சியின் வழியாக இயல்பாக எடுத்துரைக்கிறது.சமண முனிவர்களின் வாழ்க்கைமுறையை முன்மாதிரியாகக் கொண்டு, துறவறம் என்பது உலகத்தை வெறுப்பதல்ல; உலக ஆசைகளை வெல்வதாகும் என்பதை ஆசிரியர் விளக்குகிறார். இதனால், துறவு என்பது தனிமனித ஆன்மிக முன்னேற்றத்திற்கான வழி மட்டுமன்றி, சமூக அறநெறிக்கும் அடித்தளமாக அமைகிறது.

**யசோதர காவியத்தில் சமணக் கொள்கைகள்**

- சுதத்தர் என்னும் முனிவர், ஐந்நூறு தவசிகளுடனும் உயர்ந்த சீடர்களுடனும் தூய தவத்தை மேற்கொண்டு, நகர்ப்புறச் சோலை ஒன்றில் தங்கினார். தாம் நெடுந்தொலைவு நடந்து வந்த வழியில், தம்மை அறியாமல் புழு, பூச்சி முதலிய சிறு உயிர்களுக்கு ஏதேனும் தீங்கு நிகழ்ந்திருந்தால், அதனால் ஏற்பட்ட பாவம் நீங்கும் பொருட்டு மனதில் மந்திரத்தை ஓதிக்கொண்டு, ஓரிடத்தில் ஆசனமிட்டு அமர்ந்து, தம்மிடம் வந்த அனைவருடனும் சேர்ந்து **உண்ணா நோன்பை** மேற்கொண்டிருந்தார். (யசோ.கா.24)
- அச்சம் கொண்டாலும் நமக்கு வருவது வந்தே தீரும். எனவே, நாம் ஏன் அஞ்ச வேண்டும்? அஞ்சுவதால் என்ன பயன்? அச்சம் கொள்ளுவதால் துன்பமே பெருகும். மேலும், அச்சத்தின் விளைவாக நஞ்சைப் போன்ற கொடிய துயரங்கள் நாள்தோறும் நம்மை வருத்தும். (யசோ.கா.33)
- இறப்பதும் பிறப்பதும் வினைப்பயனாலேயே நிகழ்கின்றன. நரகம், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைக் கதிகளிலும் காற்றாடியைப் போலச் சுழன்று சுழன்று எண்ணற்ற பிறவிகளை எடுத்துள்ளேன்; அவற்றை எடுத்துரைக்க இயலாது. ஒரு பிறப்பு முடிவுற்றவுடன், எய்த வேண்டிய வினைப்பயனை அனுபவிப்பதற்காக மீண்டும் பிறக்கவே இறப்பு ஏற்படுகிறது. இப்போது நாம் இறக்கப் போவதும் மீண்டும் பிறப்பதற்காகவே ஆகும். (யசோ.க.35)
- நாம் ஒவ்வொரு பிறவியிலும் பிறக்கும்போது உடம்பினை மட்டும் விரும்பிப் போற்றாமல், உயிரின் நலனைப் போற்றி வாழ்ந்தால், பிறவி என்னும் நோய் நம்மைத் தொடராது;

ஒழிந்துவிடும். இச்சிறந்த நெறியை உணராது, அறநெறியைப் பின்பற்றாத எண்ணற்றோர் கடந்த காலங்களில் இறந்துபோயினர். (யசோ.கா.36)

- மக்கள் பிறவியுள், அரசர்களுக்கெல்லாம் அரசராக இருந்து அனைவரையும் தமக்கு அடிமைப்படுத்தி ஆளும் ஆற்றலும் அதிகாரமும் உடைய பேரரசர்களும், அவர்களைப் போன்ற பலரும் இன்றுவரை அழியாமல் நிலைத்ததில்லை. அனைவரும் இறுதியில் இவ்வுலகை விட்டு நீங்கிச் சென்றவர்களே. (யசோ.கா.43)
- முன்னர் உடுத்திய பழைய ஆடையை கழற்றி விட்டு புதிய ஆடையை அணிவது போலவும், நீண்ட நாள் குடியிருந்த வீட்டை விட்டு புதிய வீட்டிற்குக் குடிபெயர்வது போலவும், நமது பிறப்பும் இறப்பும் நிகழ்கின்றன. எனவே, அதைப் பற்றியே வருந்திப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை. (யசோ.கா.44)
- அபயருசி கூற்றாக, எனது உரையைக் கேட்போர் இருவினைகளையும் நீக்கிக் கொள்வர். அவர்களிடம் உறைந்திருக்கும் தீவினைகளின் ஊற்றுகள் அடைபட்டு, நல்லறிவு பெருகும். மெய்யியல் கூறுகளை ஆராய்ந்து, உலக வாழ்வில் பற்றினை நீக்கி, துறவற நெறியை மேற்கொள்வோர் அடையக்கூடிய வீடுபேற்றிற்குத் தகுதியுடையவர்களாக ஆவர். (யசோ.கா.70)
- இளமை நிலையற்றது. இவ்வாறு நிலையில்லாத இளமையை ஏன் பெரிதாகப் போற்ற வேண்டும்? நமக்கு அமைந்துள்ள உறவினர்களும் இதுபோல நிலையற்றவர்களே. ஆகையால், அவர்கள்மீது உள்ளத்தில் ஏற்படும் பற்றினை விட்டுவிடுவது பொருத்தமானதாகும். (யசோ.கா.81)
- இழிவான காமவெறியானது நெஞ்சில் நல்ல எண்ணங்கள் தோன்றாமல் தடுத்துவிடும். நல்ல குடும்பப் பெருமையைச் சிதைத்துவிடும். உலகில் நமக்குள்ள நற்பெயரை அழித்துவிடும். மேலும் மேலும் பழிகளைப் பெருக்கும். மன உறுதியை இழக்கச் செய்யும். ஆண்மையையும் தலைமைப் பண்பையும் குலைத்துவிடும். மனத்தையும் கண் முதலான ஐம்பொறிகளையும் நிலைகுலையச் செய்யும் என்று யசோதரன் சிந்தித்தான். (யசோ.கா.126)
- யசோதரன் கூறுகிறான்: "நான் உயிர் வாழ்வதற்காக எளிய உயிர்களைக் கொன்றால், மேலுலக இன்பம் மட்டுமல்லாமல் எனக்கு வரக்கூடிய நல்வினைப் பயன்களும் நீங்கிவிடும். மேலும், உடம்பின் இன்பத்தை மட்டும் கருதி, பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தை எண்ணாமல் வாழும் வாழ்க்கை விரைவில் அழிந்துவிடும். (யசோ.கா.140)
- அறநெறியால் பொருள் ஈட்டி அதனை அனுபவிக்காதவன்; தவம் செய்பவர்களைக் காண விரும்பாதவன்; கொடிய செயல்களால் பொருள் ஈட்டி, அரச பதவியின் செருக்கிலும் இன்பத்திலும் திளைத்தவன்; இளம் பெண்களின் இன்பத்தில் அளவுகடந்து மூழ்கியவன். இறுதியில் அவனது மரணம் இயல்பானதாக அமையவில்லை. "இவன் இனி எந்தக் கதியை அடைவானோ?" என்று சிலர் யசோதரனைப் பற்றி பேசிக்கொண்டனர். (யசோ.கா.155)

- முற்பிறப்பில் செய்த தீவினையால் நல்லுணர்வு இல்லாதவளாக அமிர்தமதி விளங்கினாள். இப்பிறப்பில் அவள் அனுபவிக்கும் இந்நோய்கள், அவள் செய்த தீவினைகளின் பயன்களே. இனியும் தீவினைகளைச் செய்தால், எப்பிறவியிலும் அவளுக்குத் துன்பமே தோன்றும். அவளுடைய உடம்பு அழிந்தாலும், வினைப்பயன்கள் ஒழியாது. இதுவே மெய்யான உண்மையாகும். (யசோ.கா.217)

மனதில் தோன்றும் மாறுபட்ட எண்ணங்களை நீக்கி மனத்தைத் தூய்மைப்படுத்தும். ஐம்புலன்களின் நுகர்ச்சியால் ஏற்படும் ஆசைகளை அறுக்கும். கொலை முதலான கொடிய செயல்களுக்குக் காரணமாகும் தீய எண்ணங்கள் தோன்றாதவாறு அவற்றை அழித்துவிடும். அழகிய பெண்களிடத்துத் தோன்றும் காம உணர்வையும் வெறுக்கச் செய்து, மனத்தை அறநெறியில் நிலைநிறுத்தும். உலகில் பிறந்தவர்கள் தத்தம் முயற்சியினாலேயே நல்ல பயன்களை அடைவார்கள். இறந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லை; இருவினைப் பயன்கள் எதுவுமில்லை என்று கூறுகின்ற அறியாமைக் கொள்கையை விட்டு, அறநெறியாகிய சமண நெறியில் வாழ வேண்டும் என்பதை யசோதர காவியம் உணர்த்துகிறது.

**அகம்பனர் கூறும் அறநெறி**

அகம்பாணர் கூறுகிறார்: குறைவற்ற அறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் மூன்றையும் மேற்கொண்டு பற்றற்ற மனத்துடன் வாழ்வோருக்கு மறுபிறவியில் தேவருலக இன்பம் கிடைக்கும். இப்பிறவியிலேயே தெய்வத்தன்மை பெறும் தகுதியும், பல்வேறு நற்பெயர்களும் உண்டாகும்.உலகப் பொருள்களின் இயல்பை நுட்பமாக அறிந்து தெளிவதே நல்லறிவு ஆகும். அவ்வாறு அறிந்த பொருள்களின் உண்மை இயல்புகளை ஐயமும் திரிபும் இன்றி உள்ளத்தால் தெளிவாக உணர்வது நற்காட்சி ஆகும். மனம் வீசும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, பூக்கள் மலர்ந்த அசோக மரத்தடியில் வீற்றிருக்கும் அருகக் கடவுள் அருளிய அறநெறிகளில் உறுதியான நம்பிக்கை கொண்டு வாழ்வதும் நற்காட்சியின் ஒரு பகுதியாகும்.

பெரும்பழிகளாகிய கொலை, பொய் கூறுதல், திருடுதல், பிறர் மனைவியை விரும்புதல், பொருளாசை ஆகிய ஐந்து குற்றங்களையும் விட்டு, அவற்றைத் தவிர்க்கும் ஐவகை நோன்புகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், பெரியோர்கள் விலக்கிக் கூறிய புலால் உணவு, மது, கள் ஆகியவற்றையும் முற்றிலும் தவிர்த்து வாழ்வதே நல்லொழுக்கமாகும்.கொல்லாமை என்னும் உயர்ந்த பண்பால் ஒருவன் இவ்வுலகில் தெய்வமாகப் போற்றப்படுவான். மாறாத உண்மையைப் பேசும் பண்பு அவனுக்கு நன்மதிப்பை அளிக்கும். களவு செய்யாமல் வாழ்வதால் மதிப்பும் பேரருளும் கிடைக்கும். பிறர் மனைவியை விரும்பாத நற்குணம் அழியாத பெருமையையும் உறுதியான மனவலிமையையும் தரும். பொருளாசையின்மை மனத்தெளிவை வழங்கும். புலால் உணவையும் மதுவையும் தவிர்ப்பதால் புகழ், அழகு, வெற்றி, செல்வம், சிறப்பு, இன்பம் ஆகியவை கிடைக்கும் என்று அகம்பனர் அறிவுரை வழங்குகிறார்.

- உலக உயிர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு, அவற்றைத் தன் உயிரின் துன்பமாகக் கருதி மனம் இளகி உருகி, அவற்றின் துயரங்களைப் போக்க முயல வேண்டும். அதுவே எல்லா நோன்புகளிலும் உயர்ந்த நோன்பாகும். அந்நோன்பை மேற்கொள்வதற்கு கருணையும் தகுதியும் துணையாக இருக்க வேண்டும். (யசோ.கா.247)
- கடந்த காலங்களில் நீ மனதில் இரக்கமின்றி உயிர்களை அச்சுறுத்தி வருத்தினாய். தொடர்ந்து கொலைச் செயல்களைச் செய்து அளவற்ற தீவினைகளைச் சேர்த்துக் கொண்டாய். அதன் விளைவாக பல பிறவிகளை எடுத்து, ஒவ்வொரு பிறவியிலும் பெருந்துன்பங்களை அனுபவித்து வருகின்றாய். உயர்ந்த அறங்களை மேற்கொள்வதாலன்றி, அந்தத் துன்பங்களிலிருந்து விடுபடும் வழி வேறில்லை. (யசோ.கா.249)
- நிலையற்ற உடம்பின் வாழ்க்கையை நீண்ட நாள் நிலைநிறுத்தலாம் என்று எண்ணி கொலைச் செயல்களை மேற்கொண்டு வாழும் வெற்றி வேந்தர்களாக இருந்தாலும், அவர்கள் இவ்வுலகில் சில நாட்களே வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவர்கூட தாம் விரும்பிய காலம் வரை வாழ்ந்ததில்லை. மாறாக, அவர்கள் பிறவிக் கடலில் நீண்ட காலம் கரையேற முடியாமல் மூழ்கித் துன்புறுவர்.உயிர்களிடம் இரக்கமின்றிக் கொன்று, அவற்றின் ஊனை உண்டு மகிழ்ந்தவர்கள் துன்பம் நிறைந்த நரகத்தைத் தவிர வேறு கதியை அடையமாட்டார்கள் என்று முனிவர் கூறுகிறார். (யசோ.கா.252)

சுதத்த முனிவரைக் கொல்வதற்காக யேசோமதி வாளை உருவினான். அப்போது, இளைஞரான கல்யாணமித்திரன் என்னும் வணிகன், யசோமதி மன்னனின் உயிர் நண்பனாக இருந்தான். அவன் அவ்விடத்திற்கு வந்து, இடையில் நின்று மன்னனைத் தடுத்து,“மாமுனிவரின் வாழ்வை முடிக்க நினைப்பது ஏன்?”என்று வினவினான். “மாலை அணிந்த வீரவேந்தனே! அரச இன்பத்தைத் தூசுபோல் எண்ணி வெறுத்துத் துறந்து, துறவறம் என்னும் உயர்ந்த மலையைத் தாங்கி நிற்கும் மாமுனிவரின் திருவடிகளை வணங்கி வழிபடாமல், சினம் என்னும் தீயால் எரியும் மனத்துடன் கொலை வழியை ஏன் மேற்கொண்டாய்? அதன் காரணத்தை கூறு.”என்று நண்பனாகிய யசோமதி மன்னனிடம் கேட்டான். “வெற்றி வேலனே! இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் நம் உயிருக்கு இணையானவையே என்று கருதி, எவ்வித தடுமாற்றமும் இன்றி கருணையுடன் அவற்றைப் பாதுகாக்கும் கடமையில் தவறாதவர் இவராவார். கலிங்க நாட்டைத் தன் தோள்வலிமையால் வேறு யாருக்கும் இடமளிக்காமல் தனித்து ஆட்சி செய்த சிங்கத்துக்கு ஒப்பான வீரமன்னனே, பின்னர் துறவறம் பூண்டு இம்முனிவராக விளங்கினார். ஆகையால், இவரது அழகிய திருவடிகளில் பணிந்து, உன் தீவினைகளைப் போக்கி உயர்ந்த நிலையை அடைவாயாக” என்று நண்பன் அன்போடு அறிவுறுத்தினான். “இந்த முனிவரின் திருவடிகளை உள்ளன்போடு அடைந்தவர்கள் தேவர்களுக்கே அரசர்களாக உயர்வர். ஆனால், தமது அறியாமையால் இவருக்குத் தீங்கு செய்பவர்கள் மிகக் கொடிய நரகத்தில் வீழ்வர். தம்மை அடைந்தவர்களுக்கு நிழல் போல அருளைப் புரிபவர் இவர். வெறுப்பின்மையை உடையவர்; உலக வாழ்க்கையைத் துறந்தவர்; கடவுள் காட்டிய அறநெறியை

மேற்கொண்டு வாழ்பவர்" என்று கூறினான். "மேகம், மின்னல், வில் ஆகியவை எவ்வாறு நிலையற்றவையோ, அதுபோலவே இவ்வுலகில் இன்பமும், செல்வமும், இளமையும் விரைவில் அழிந்துவிடும்" என்பதைத் தெளிவாக உணர்ந்து, யசோமதி துறவறத்தை மேற்கொண்டான். "அருள் பெருகும் நல்லறத்தைப் பின்பற்றி, அதன் பயனாக வீடுபேறு என்னும் பேரின்பத்தை அடைவேன்" என்று மன்னன் யசோமதி உறுதி கொண்டான்.

**முடிவுரை**

காவியத்தில் சண்டமாரி என்னும் தெய்வத்தினை முன்னிறுத்தி அறங்கள் போதிக்கப்படுகின்றன. சுதத்த முனிவர் உண்ணா நோன்பு இருத்தல், இறப்பது பிறப்பதற்கே, அறநெறி நின்றார் மீண்டும் பிறவார், இந்திரர் உடம்பும் அழிவுத் தன்மைக்கு உரியது, இளமை நிலையாமை ஆகிய வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கிறது. அவந்தி நாட்டு மன்னன் அசோகன் துறவியாதல், காமத்தின் தீமைகள், உயிர்க்கொலை செய்தால் பாவம் மிகும்,உயிர்கள் நால்வகையான பிறப்புகளுடன் பல பிறவிகளை எடுக்கின்றன, யசோதரனும் அவரது தாய் சந்திரமதியும் மயில் -நாய் முள்ளம்பன்றி- பாம்பு, மீன் –முதலை, பெண் ஆடு ஆண் நாடு, எருமை, கோழி என பல பிறவிகளை எடுத்து இறுதியில் தேவலோகப் பதவியை அடைதல் ஆகியவற்றை எடுத்துரைத்து கர்மவினைப் பற்றி செய்திகளை விளம்புகிறது. அகம்பனர் என்னும் முனிவர், மெய்ப்பொருள் கூறல், மனிதன் தெய்வமாகலாம், உயிர் போகும் வழி காண முடிவதில்லை, காற்றும் ஒளியும் போல் உயிரும் உள்ளது, நல்லறம், நற்காட்சி, நல்லொழுக்கம், நற்குண பண்புகள், உயிர்க்கருணை ஆகிய சமணக்கொள்கைளைப் போதிக்கிறார். சண்டகருமன் சமண சமயத்தைத் தழுவுதல், சுதத்த முனிவர் எவயிரும் என் உயிரே எனக்கூறினார். யசோமதி மற்றும் அனைவரும் சமண அறநெறியில் அடைக்கலமாகின்றனர். அபயருசியும் அபயமதியும் தன் பழம் பிறப்பினை உணர்ந்து தவம் வாழ்வினை அடைந்த்தை யசோதர காவியம் அழகாக எடுத்துரைக்கிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] அப்பாண்டைராஜன், ஜெ. *ஐஞ்சிறு காப்பியங்கள்: யசோதர காவியம்*, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2023.

[2] காசிராசன், இரா. யசோதர காவியம்,*தமிழ் இணையக் கல்விக்கழகம்*, சென்னை.

[3] கஸ்தூரி, மு. யசோதர காவியத்தில் தமிழ் விருத்தப் பா வடிவ மரபு, *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*,( ISSN 2581-7140)தொகுதி 8, சிறப்பிதழ் 1, ஆகஸ்ட் 2025,

[4] நீலகேசி, ஜெ. யசோதர காவியத்தில் பண்ணிசை, *சமணவியல் துறை*, சென்னைப் பல்கலைக்கழகம்.

[5] மணி, தா. *யசோதர காவியம்,மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2008.

[6] வேல்சாமி, பொ. யசோதர காவியம் பதிப்புப் பற்றிய சில குறிப்புகள், *கீற்று இணைய இதழ்*, *உங்கள் நூலகம்*, ஆகஸ்ட் 2011.

## References

[1] *Appāṇṭairājan, J. Aiñciṟu Kāppiyaṅkaḷ: Yacōdhara Kāviyam. Varttamāṉaṉ* Patippakam, *Cheṉṉai, 2023.*

*[2] Kāsirācaṉ, R. "Yacōdhara Kāviyam." Tamiḻ Iṇaiyak Kalvikkaḻakam, Cheṉṉai.*

*[3] Kastūri, M. "Yacōdhara Kāviyattil Tamiḻ Viruttappā Vaṭiva Marapu." Tamiḻmoḻi Maṟṟum Ilakkiyap Paṉṉāṭṭu Āyvitaḻ, vol. 8, special issue 1, August 2025. ISSN 2581-7140.*

*[4] Nīlakēci, J. "Yacōdhara Kāviyattil Paṇṇicai." Samaṇaviyal Tuṟai, Cheṉṉai Palkalaikkaḻakam.*

*[5] Maṇi, T. Yacōdhara Kāviyam: Mūlamum Uraiyum. Cāratā Patippakam, Cheṉṉai, 2008.*

*[6] Velsāmi, P. "Yacōdhara Kāviyam Patippup Paṟṟiya Cila Kuṟippukaḷ." Kīṟṟu Iṇaiya Itaḻ, Uṅkaḷ Nūlakam, August 2011.*